# முழங்கால் யுத்தம்

# பிரார்த்தனை நேரம்

ஆவிக்குரிய
ஆசீர்வாதங்கள்...

Muzhangal Yutthham

Spiritual Blessings

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489


If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

முழங்கால் யுத்தம்

# ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்



'நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால்,
கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும்
இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்'
(கொலோ 3:1)

ஊழியர் L. ஜோசப்

# ஆசிரியர் உரை!

'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவை களெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்' (மத் 6:33)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவனின் கிருபையால், முழங்கால் யுத்தம் புத்தக வரிசையில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எனும் சிறிய ஜெபக்கையேட்டினை இப்பொழுது வெளியிட்டிருக்கிறோம்.

'பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை களையே நாடுங்கள்' (கொலோ 3:2) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயருக்கு எழுதுவதுபோல, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆண்டவருடைய ஜனம் நிரப்பப்படுவதற்கும், அவருடைய வருகை சமீபித்திருக்கிற இக்கடைசி காலத்திலே தேவராஜ்யத்தின் பணியிலே எழும்பி பிரகாசிப்பதற்கும், ஆவிக்குரிய மேலானவைகளைத் தேடி ஜெபங்களை ஏறெடுக்கவே இதனை ஆயத்தப் படுத்தியுள்ளோம். 'என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்' (எரே 33:3) என்று சர்வ வல்லவர் வாக்குபண்ணியிருக்கிறாரே.



இதில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபங்கள் எல்லாம் சொற்பம்தான். ஆனாலும், எப்படி ஜெபிப்பது? என்று தெரியாமல் இருக்கும் புதிதாய் இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகளுக்கு இது ஒரு பொக்கிஷமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதிலுள்ளபடி நீங்கள் ஜெபிக்கத் துவங்கும்போது தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிற ஆவியானவர் தாமே ஜெபத்தில் உங்களைத் தொடர்ந்து நடத்த ஆரம்பிப்பார். அவருடைய நடத்துதலுக்கேற்ப உங்களை முற்றும் விட்டுக்கொடுக்கும்பொழுது இதில் எழுதப்பட்டிராத இன்னும் ஏராளமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபம் பண்ண உங்களைப் போதித்து நடத்திச் செல்வார் என்பது உறுதி.

ஆகையால் தேவபிள்ளைகளே, கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட நித்தம் அவர் சமுகம் செல்லுங்கள். அவரைத் துதியினால் உயர்த்துங்கள். அவர்பாதம் அண்டி ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக மன்றாடுங்கள். அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிற தேவன்தாமே அதனை நம் வாழ்வில் ருசிக்கும்படி அநுக்கிரகிப்பார். ஆமென்.

'அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு

# உள்ளே...

'பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்' (எபே 1:3)


I. துதியுங்கள்! தேவனை... ... 6

II. ஜெபியுங்கள்! ஆசீர்வாதங்கள் பெற...

1. பரிசுத்தமாய் வாழ ... 10

2. ஜெபத்தில் வளர ... 12

3. தேவசித்தம் அறிய ... 14

4. தேவ ஆலோசனை உண்டாக ... 16

5. தேவ வழிநடத்துதல் உண்டாக ... 18

6. தேவ ஆளுகை உண்டாக ... 20

7. ஆத்தும பாரம் உண்டாக ... 22

8. குடும்பத்தினர் இரட்சிக்கப்பட ... 24

9. கணவர் இரட்சிக்கப்பட ... 26

10. ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் பெருக ... 28

11. தேவனை அறிகிற அறிவில் வளர ... 30

12. பிரகாசமான மனக்கண்கள் உண்டாக ... 32





13. உள்ளான மனிதனில் பெலனடைய ... 34

14. தரிசன வெளிப்படுத்தல்கள் கிடைக்க ... 36

15. தேவவல்லமையால் நிரப்பப்பட ... 38

16. ஊழிய வாஞ்சை உண்டாக ... 40

17. தேவனால் பயன்படுத்தப்பட ... 42

18. தெய்வீக குணங்களில் வளர ... 44

19. உதாரத்துவமாய் கொடுக்கிறவனாக மாற.. 46

20. கள்ள உபதேசங்களுக்குத் தப்ப ... 48

III. வாங்குங்கள்! ஜெபக்கையேடுகளை ... 50


'கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;
தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;
தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்'
(மத் 7:7)

# துதியுங்கள் தேவனை!

'தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும்
ஆகாயவிரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள்' (சங் 150:1)

- ❀ பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே!
- ❀ பரிசுத்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே!
- ❀ விலையேறப்பெற்ற பரிசுத்த ஆவியானவரே!
- ❀ வெளிச்சமும், இரட்சிப்புமானவரே!
- ❀ எங்களுக்காக அடிக்கப்பட்டவரே!
- ❀ எங்களுக்காக அவமானப்பட்டவரே!
- ❀ எங்களுக்காக இரத்தம் சிந்தினவரே!
- ❀ எங்களுக்காக சிலுவை சுமந்தவரே!
- ❀ கிருபாதார பலியானவரே!
- ❀ முள்முடியை சிரசின்மேல் ஏற்றுக்கொண்டவரே!
- ❀ பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவரே!
- ❀ உம்மிடத்தில் வருபவனை புறம்பே தள்ளாதவரே!
- ❀ ஒரே தேவனாயிருக்கிற கர்த்தரே!
- ❀ வசனத்தைக் கொண்டு நியாயந்தீர்க்கிறவரே!
- ❀ மகத்துவமும், ஆச்சரியமுமானவரே!
- ❀ சகலத்தையும் புதிதாக்குகிறவரே!
- ❀ சகலத்தையும் நன்மைக்கென்றே படைத்தவரே!
- ❀ சர்வத்தையும் தாங்குகிறவரே!



- ❀ சத்திய வசனத்தினால் ஜநிப்பித்தவரே!
- ❀ சத்தியத்தை சாட்சி கொடுக்கப் பிறந்தவரே!
- ❀ சத்துருக்குப் பிரதிபலன் அளிக்கிறவரே!
- ❀ சதாகாலமும் உயிரோடிருக்கிற தேவனே!
- ❀ சதாகாலமும் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவரே!
- ❀ சர்வசேனையையும் உண்டாக்கினவரே!
- ❀ சர்வலோக நியாயாதிபதியே!
- ❀ பாவங்களை நிவர்த்தி செய்கிறவரே!
- ❀ மனுஷரின் ஆவியை கரத்தில் வைத்திருப்பவரே!
- ❀ மனுஷரில் முந்திப் பிறந்தவரே!
- ❀ கடைசி நாளில் பூமியின்மேல் நிற்கிறவரே!
- ❀ காலைதோறும் விசாரிக்கிறவரே!
- ❀ நிமிஷந்தோறும் சோதித்தறிகிறவரே!
- ❀ மன்னுயிரைக் காப்பவரே!
- ❀ சம்பூரணமான அந்தரங்க ஞானமுடையவரே!
- ❀ தொகையில்லா சேனைகளின் தேவனே!
- ❀ தண்ணீர்களின் மேல் சக்கர வட்டம் தீர்த்தவரே!
- ❀ வல்லமையான இடிமுழக்கத்தையுடையவரே!
- ❀ நீதியின் பலனை அருளிச் செய்பவரே!
- ❀ வல்லமையில் உயர்ந்திருக்கிற நாமமுடையவரே!
- ❀ அற்புதமான செய்கைகளையுடையவரே!
- ❀ தென்றலினால் பூமியை அமையப்பண்ணுகிறவரே

❀ இடிமுழக்கமாய் சத்தமிடுகிறவரே!

❀ ஜீவத் தண்ணீர் ஊற்றானவரே!

❀ சீர்கேடுகளைக் குணமாக்குகிறவரே!

❀ வல்லமையில் பெரிய நாமத்தையுடையவரே!

❀ யாக்கோபின் பங்காயிருக்கிறவரே!

❀ ஆபத்துக் காலத்தில் இரட்சகருமானவரே!

❀ உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமுடையவரே!

❀ பயங்கரமும், பராக்கிரமசாலியுமானவரே!

❀ நீதியாயிருக்கிற கர்த்தர் எனும் நாமமுடையவரே!

❀ நீதியின் வாசஸ்தலமானவரே!

❀ பரிசுத்த பர்வதமானவரே!

❀ மாம்சமான யாவருக்கும் தேவனானவரே!

❀ மீட்பரும், வல்லவருமானவரே!

❀ முடிவில்லாத இரக்கங்களையுடையவரே!

❀ ஜீவனுடைய ஆவியானவரே!

❀ அக்கினி மயமான நிறமுடையவரே!

❀ மகிமையின் சாயலையுடையவரே!

❀ பலவீனமானவைகளைப் பலப்படுத்துகிறவரே!

❀ நசல்கொண்டதைக் குணமாக்குகிறவரே!

❀ பூச்சக்கரத்தை ஞானத்தினால் படைத்தவரே!

❀ நீதியைப் பொழியச் செய்கிற தேவனே!

❀ பூமியில் மனுஷனை சிருஷ்டித்த தேவனே!



❀ துன்மார்க்கரை அழிக்கிற தேவனே!

❀ துன்மார்க்கருடைய புயங்களை முறிக்கிறவரே!

❀ நீதிமானைத் தாங்குகிற தேவனே!

❀ நியாயத்தை விரும்புகிற தேவனே!

❀ ஆறுதலும், இரட்சிப்புமான தேவனே!

❀ நித்திய வெளிச்சமாயிருக்கிற தேவனே!

❀ ஞானமும், வல்லமையும் நிறைந்த தேவனே!

❀ மரித்தோரை உயிர்ப்பிக்கிற தேவனே!

❀ மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த தேவனே!

❀ மேகத்தின்மேல் ஏறிவருகிற தேவனே!

❀ ஏழைக்கு பெலனாயிருக்கிற தேவனே!

❀ எளியவனுக்கு திடனாயிருக்கிற தேவனே!

❀ அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டவரே!

❀ தழும்புகளால் குணமாக்கினவரே!

❀ ஆபத்திலே ஜெபத்தைக் கேட்கும் தேவனே!

❀ எல்லா தேவர்களுக்கும் தேவனே!

❀ தப்பிதங்களை மன்னிக்கும் தேவனே!

❀ உம்மை நம்புகிறவர்களை நேசிக்கும் தேவனே!

❀ உண்மையுள்ள தேவனே! உமக்கு ஸ்தோத்திரம்!

'ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி,
உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும்
ஸ்தோத்திரிப்பேன்' (சங் 145:1)

# பரிசுத்தமாய் வாழ!

'உங்கள் தேவனும்
கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால்
நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' (லேவி 19:2)

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! பரிசுத்தத்தில் மகத்துவமான உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உம்முடைய பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என்னை உம் கரத்தில் ஒப்புவிக்கிறேன். என் ஆவி ஆத்துமா சரீரத்தில் உம் பரிசுத்தம் விளங்கும்படி உமது பரிசுத்த நாமத்தின் வல்லமை என்மேல் இரங்கும்படி ஜெபிக்கிறேன்.

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே! நான் அறிந்தும், அறியாமலும் உமக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி நடப்பித்த என்னுடைய எல்லாத் தவறுகளையும், தப்பிதங்களையும், குற்றங்களையும், குறைகளையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் உம்மிடத்தில் அறிக்கையிடுகிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் தயவாய் மன்னித்தருளும். உமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் வல்லமையினால் என் பாவமற என்னைக் கழுவும். உமது ஆவியின் அபிஷேகத்தினால் என்னைச் சுத்திகரியும். உமது சத்திய வசனத்தினால் என்னைப் பரிசுத்தமாக்கும்.



பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவரே! உம்மைப் போல் நானும் என் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் கறை திரை பிழையற்ற பரிசுத்தனாய் வாழ எனக்கு அநுக்கிரகம் செய்தருளும். உலகம், மாம்சம், பிசாசினால் வரும் எல்லா பாவ சோதனைகளுக்கும் நீர் என்னை விலக்கிக் காத்தருளும். ஒவ்வொருநாளும் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைந்து பாவமற்ற பரிசுத்த ஜீவியத்தின் மூலம் உம் சித்தம் செய்திட கிருபை தந்தருளும்.

பெலவீனத்தில் உதவி செய்கிற ஆவியானவரே! உம்மிலே பெலன்கொள்ளும்படி எனக்கு உதவியருளும். ஒவ்வொருநாளும் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்துணர்த்தி என்னை சத்தியத்தின் பாதையிலே நடத்தியருளும். முடிவுபரியந்தம் கறைபடாத பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து தேவனின் ராஜ்யத்தில் பங்கடைய எனக்குப் பெலன் தந்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு பரிசுத்தமாய் வாழ எனக்கு பெலனையும், கிருபையையும் தருவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்!

'உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக' (1தெச 5:23)

# ஜெபத்தில் வளர!

'அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார்' (மாற் 1:35)

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! சர்வ வல்லமையுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது செல்லப்பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் ஜெபவாழ்வில் ஒரு மாபெரும் மாற்றமும், ஆசீர்வாதமும், வளர்ச்சியும், பெருக்கமும் உண்டாக உம்மை நோக்கிப் பார்க்கிறேன்.

தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக இரவும் பகலும் வேண்டுதல் செய்யும்படி தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிற இயேசுவே! உம்மைப்போல் நானும் பிதாவின் பிரசன்னத்தில் இடைவிடாமல் ஜெபம்பண்ண உம் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் என்மேல் அளவில்லாமல் ஊற்றும். விண்ணப்பத்தினாலும், ஸ்தோத்திரத்தினாலும், ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் ஒவ்வொரு நாளும் உம்மைத் தேடிட ஜெபத்தின்மேல் தீராத வாஞ்சையையும், தாகத்தையும், ஆசையையும் எனக்குத் தந்தருளும். உம் சமுகத்தில் ஒருமனப்பட்டு ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்து ஊக்கமாய் வேண்டுதல் செய்ய கிருபை செய்தருளும்.



'நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது' (மத் 26:41) என்ற உமது வார்த்தையின்படி எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி ஆவியில் விழித்திருக்க எனக்குப் பெலன் தந்தருளும். நீர் மாம்சத்திலிருந்த நாட்களில், மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்ததைப்போல நானும் என் ஆவி ஆத்துமா சரீரத்தை உம் சமுகத்தில் ஊற்றிவிட தயை செய்தருளும். என் உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடை உண்டுபண்ணுகிற சத்துருவின் கிரியைகள் இயேசுவின் நாமத்தில் அவமாய்ப் போகட்டும். தேவஆவியானவரே! உமது உதவியினாலே என் ஜெபவாழ்வு பலமடங்கு பலன் தரும்படி வல்லமையால் நிறைத்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது விண்ணப்பத்தின் ஆவியை என்மேல் ஊற்றுவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!!

'ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்குமுன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்' (லூக் 21:36)

# தேவசித்தம் அறிய!

'உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்' (Iயோவா 2:17)

பரலோகத்தில் வாசம்பண்ணுகிற எங்கள் பிதாவே! கிருபை பொருந்திய உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தில் உமது கிருபாசனத்தண்டை வருகிறேன்! என் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையும் உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன்! இப்பொழுதும் என் படிப்பு/வேலை/திருமணம்/தொழில்/வியாபாரம்/குடும்பம்/ஊழியம்/............................ போன்ற இந்த காரியத்தில் உம்முடைய சித்தம் இன்னது என்று அறிந்துகொள்ளும்படி உம்மை நோக்கிப் பார்க்கிறேன். 'நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்' (எபே 5:17) என்று உம்முடைய வார்த்தை சொல்கிறதே. நான் மதியற்றவனாக இராதபடி இந்த காரியத்தில் உமது சித்தத்தை எனக்கு அறிவியும். உமது வசனத்தின் மூலமாவது, தரிசனத்தின் மூலமாவது, சொப்பனத்தின் மூல மாவது, பரிசுத்தவான்கள் மூலமாவது உம் திருவுள சித்தத்தை எனக்குத் தெரியப்படுத்தும். உமது சித்தத்தை அறிகிற அறிவினால் என்னை நிரப்பும்.



தம்முடைய சித்தத்தின்படியே எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவனே! உம்முடைய குமாரனாகிய கிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில் அனுதினம் உம் சித்தமறிந்து அதைச் செயல்படுத்தினதைப் போல நானும் உம் சித்தம் அறிந்து அதின்படியே நடக்க எனக்கு அநுக்கிரகம் செய்தருளும். உமக்குச் சித்தமல்லாததைச் செய்து உம்மை வேதனைப் படுத்திவிடாதபடி என்னை தடுத்தாட்கொள்ளும். என்னுடைய மாம்சத்தில் எழுவதையோ, மற்ற மனிதர்கள் கூறுவதையோ செய்துவிடாமல் உமது சித்தத்தை மாத்திரம் செய்து உம் நாமத்தை மகிமைப்படுத்த கிருபையருளும்.

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரே! என்னைக் குறித்த பிதாவின் சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளும்படி எனக்கு உதவி செய்தருளும். தேவனுடைய சித்தத்தை அறிந்துணரக்கூடாதபடி தடைபண்ணுகிற சத்துருவின் வல்லமைகள் இயேசுவின் நாமத்தில் முறிக்கப்படட்டும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது சித்தத்தை எனக்கு வெளிப்படுத்துவதற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்' (1யோவா 5:14)

# தேவ ஆலோசனை உண்டாக!

'கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்' (சங் 33:11)

பரலோகத்தில் வீற்றிருக்கிற பிதாவே! ஞானமும், கிருபையும் பொருந்திய உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்

உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என்னை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன். இப்பொழுதும் ................................ காரியத்தில் உமது ஆலோசனை வேண்டி உம்மை மன்றாடி நிற்கிறேன். இதுவரை உம்மிடம் ஆலோசனை பெறாமல் சுயமாய் நான் நடப்பித்த என்னுடைய எல்லாக் காரியங்களையும், மற்ற மனிதர்கள் கொடுத்த ஆலோசனைப்படி நடந்த என் எல்லாச் செயல்களையும் தயவாய் மன்னித்தருளும். என் சுயத்தின்மேலும், நாசியில் சுவாசமுள்ள மற்ற மனிதர்பேரிலும் நான் வைத்திருந்த நம்பிக்கைக்காக என்னைக் கிருபையாய் மன்னித்தருளும்.

ஆலோசனையில் ஆச்சரியமானவரே! இந்த காரியத்தை நான் எப்படி செய்வதென்று அறியும்படி உமது ஆலோசனைகளை எனக்கு அருள்செய்யும். நான் நடக்க வேண்டிய வழியையும், செய்ய வேண்டிய காரியத்தையும் எனக்குப் போதித்து உம் கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணும்.



மெய்ஞ்ஞானமும், ஆலோசனையும், புத்தியும் உடையவரே! 'தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்' (சங் 139:17) என்று தாவீது வியந்ததைப் போல எனக்கும் உமது பூர்வ ஆலோசனைகளை அருளிச்செய்து என்னை மகிழ்ச்சியாக்கும். உமது சத்திய வசனத்தின் மூலம், உமது மெல்லிய சப்தத்தின் மூலம், என் ஆவியில் உள்ளுணர்வின் மூலம் உமது அருமையான ஆலோசனைகளை எனக்குத் தந்து என்னைத் திருப்தியாக்கும். நான் வலதுபுறம், இடதுபுறம் சாயாதபடி வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று எனக்குப் பின்னாலே சொல்லும் உம்முடைய வார்த்தைகளைக் கேட்கும்படி என் செவிகளைத் திறந்தருளும். என் தனிப்பட்ட வாழ்க்கையில், குடும்பத்தில், தொழிலில், ஊழியத்தில் ஒவ்வொரு நாளும் உமது ஆலோசனைப் பெற்று, அதின்படி நடக்கவும், ஜெயத்தின்மேல் ஜெயமெடுத்து உம் நாமத்தை மகிமைப்படுத்தவும் கிருபை தந்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது ஆலோசனைகளை எனக்கு அருளிச் செய்வதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்' (சங் 16:7)

# தேவ வழிநடத்துதல் உண்டாக!

‘நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்’ (சங் 32:8)

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! வல்லமையில் மகத்தான உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உம்முடைய செல்லக்குமாரனாகிய கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் உம் சமுகம் வருகிறேன். நீர் எனக்கு அருளிய இந்த புதிய நாளுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த நாள் முழுவதும் நீர் என்னை நடத்தும்படி, உம்முடைய வழிநடத்துதல் எனக்கு உண்டாகும்படி என்னை முற்றிலுமாக உம்முடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன்.

மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறவரே! இதுவரை அறிந்தோ, அறியாமலோ என் மனசும், மாம்சமும் விரும்பினதைச் செய்து உம்முடைய பரிசுத்த வழிநடத்துதலை அசட்டை பண்ணின என்னுடைய எல்லாப் பாவங்களையும் தயவாய் மன்னித்தருளும். என் வாழ்வில் ஏற்பட்ட எல்லாப் போராட்டங்களுக்கும் என் சுய விருப்பங்களே காரணம் என்பதை உணர்ந்து உம்முன் என்னை தாழ்த்துகிறேன். என்மேல் இரக்கமாயிரும். உம் தூய இரத்தத்தினால் என்னைக் கழுவி சுத்திகரியும்.



மேகஸ்தம்பத்திலும், அக்கினிஸ்தம்பத்திலும் தம்முடைய ஜனத்தை நடத்தினவரே! ‘எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோம 8:14) என்கிற மாறாத உமது வார்த்தையின்படியே உமது நல்ல ஆவியினால் என்னைச் செவ்வையான பாதையிலே நடத்தும். உமக்குப் பிரியமானதையே செய்ய என்னைப் போதித்தருளும். என் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிந்து வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும். ஒவ்வொருநாளும் உம்மிடத்திலிருந்து தெளிவான வழிநடத்துதலைப் பெற போதுமான ஆயத்தங்களும், உம் சமுகத்தில் காத்திருக்கும் சகல கிருபையையும் எனக்குத் தந்தருளும். சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும் ஆவியானவரே! பிதாவாகிய தேவன் விரும்பும் பாதையிலே அனுதினமும் நடந்திட எனக்கு உதவி செய்தருளும்.

பிதாவே! என் ஜெபத்தைக் கேட்டு உமது சத்திய ஆவியினால் என்னை நடத்தப்போகிற கிருபைக்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

‘என்னை நேர்வழியாய் நடத்தி வந்த
என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற
கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன்’

# தேவ ஆளுகை உண்டாக!

‘அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர் ஊழியஞ்செய்து நிற்கக்கூடாமற்போயிற்று; கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று’ (IIநாளா 5:14)

பரமண்டலங்களிலிருக்கிற பிதாவே! சத்துவமும், வல்லமையுமுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உம்முடைய செல்லப்பிள்ளையாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையும், என் படிப்பு/வேலை/திருமணம்/வியாபாரம்/குடும்பம்/ஊழியம் போன்ற எல்லாவற்றையும் உம் கரங்களில் ஒப்புவிக்கிறேன்.

சதாகாலங்களிலும் ஆளுகை செய்துகொண்டிருக்கிறவரே! என்மேலும், நீர் எனக்கு அருளியிருக்கிற எல்லாவற்றின்மேலும் உமது மகத்தான ஆளுகை உண்டாக என்னையும், எனக்குள்ளதெல்லாவற்றையும் உம்மிடம் அர்ப்பணிக்கிறேன். இப்பொழுதும் என்னில் உள்ளும், புறம்புமாக உம்முடைய பலத்த ஆளுகை உண்டாக என் ஆவியை நீர் ஆட்கொள்ளும். என் ஆத்துமாவை நிரப்பும். என் சரீரத்தை அபிஷேகம்பண்ணுவியும். உம்முடைய ஓங்கிய புயத்தினாலும், மகா பலத்த கரத்தினாலும் என்னை நடத்தும். உமது கரத்தின் ஆளுகைக்குள்ளிருந்து உம் சித்தப்படி நடந்து செல்ல எனக்கு அநுக்கிரகம் செய்தருளும்.



மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்பவரே! பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் எனக்கு சுதந்தரத்தைக் கொடுக்க வல்லவராகிய உமக்கும், உம்முடைய கிருபையுள்ள வசனத்திற்கும் என்னை ஒப்புக்கொடுக்கிறேன். இந்த நாளின் என்னுடைய எல்லா வேலையிலும், போக்கிலும், வரத்திலும், பேச்சிலும், நடையிலும், நடத்தையிலும், செய்கைகளிலும் உமது ஆளுகை பரிபூரணமாய் இறங்கிவர உம்மை மன்றாடுகிறேன். உலகம், மாம்சம், பிசாசினால் வரும் சோதனைக்கு நீர் என்னை விலக்கிக் காக்கும்படி உம்மை வேண்டுகிறேன். உமது பரிசுத்த ஆளுகையை இழந்துவிடும்படியான எல்லாவித தீமையினின்றும் நீர் என்னை இரட்சித்தருளும்படி உம்மைக் கெஞ்சுகிறேன்.

ஆதியிலே ஜலத்தின்மேல் அசைவாடின தேவ ஆவியானவரே! இந்த நாள் முழுவதும் என்மேல் அசைவாடி உமது மகிமையின் பிரசன்னத்திலே களிகூர்ந்திருக்கும்படி எனக்கு உதவி செய்தருளும்.

பிதாவே! என் ஜெபத்தைக் கேட்டு உமது வல்ல கரத்தையும், பலத்த ஆளுகையையும் அனுப்புவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

‘அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்பரியந்தமும் செல்லும்’ ([illegible])

# ஆத்துமபாரம் உண்டாக!

'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?' (மாற் 8:36)

பரலோகத்தில் வாசமாயிருக்கிற எங்கள் பிதாவே! வல்லமை நிறைந்த உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!!

உமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே உம் சமுகத்திற்கு வருகிறேன். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் சித்தமுள்ளவராய் தம்முடைய ஒரே பேறான குமாரனென்றும் பாராமல் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்காகவும், பின்வரும் சந்ததிக்காகவும் அவரையே ஒப்புக் கொடுத்து ஆத்துமாக்கள்மேலுள்ள உம் அன்பை வெளிப்படுத்தினீரே! என்னையும் உம்முடைய ஆத்துமபாரத்தினால் அளவில்லாமல் நிரப்பும்.

இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே பரத்திலிருந்து இறங்கி வந்த தேவகுமாரனே! என்னையும், என் குடும்பத்தையும், என் எதிர் காலத்தையும் குறித்து மாத்திரம் கரிசனையுள்ள வனாகச் செயல்பட்டு வந்த என்னுடைய எல்லா சுயநல நடக்கையையும் தயவாய் மன்னித்து, ஆத்துமபாரத்தையும், வாஞ்சையையும், தாகத்தை யும், தரிசனையையும் என்மேல் பொழிந்தருளும்.



தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டவரே! உம்மைப்போல் ஆத்துமாக்களுக்காகக் கண்ணீர் விட்டழுது ஜெபிக்க உம்முடைய மனதுருக்கத்தின் ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் என்மேல் அளவில்லாமல் ஊற்றியருளும். வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாமல் மெய்தேவனாகிய உம்மையறியாமல் பாதாளம் நோக்கி விரைந்தோடும் ஆத்துமாக்களுக்காகத் திறப்பிலே நின்று மன்றாட கிருபை தந்தருளும். ஆத்துமபாரத்தால் நான் நிறைந்திட தடையாக இருக்கும் சோர்வுகள், பெலவீனங்கள், நித்திரை மயக்கங்கள், சுயநல எண்ணங்கள், கவலைகள் இயேசுவின் நாமத்தில் என்னைவிட்டு விலகட்டும்.

பலவீனங்களில் உதவி செய்கிற ஆவியானவரே! ஏற்றபடி வேண்டிக்கொள்ள நான் அறியாதிருக்கிற படியால் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு என்னிலிருந்து நீர் வேண்டுதல் செய்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு ஆத்தும பாரத்தினால் என்னை நிரப்பி ஆசீர்வதிப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்' (யாக் 5:20)

# குடும்பத்தினர் இரட்சிக்கப்பட!

'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை
விசுவாசி, அப்பொழுது நீயும் உன்
வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்' (அப் 16:31)

பரமண்டலங்களில் வீற்றிருக்கிற எங்கள் பிதாவே! மகத்துவம் சிறந்த உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!!

உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இப்பொழுது உம் சமுகம் வருகிறேன். பூமியின் கடையாந்தரங்களிலிருந்த என்னைத் தூக்கி எடுத்து பாவத்தில் ஜீவித்துக்கொண்டிருந்த என்னைத் தேடிவந்தீரே. இவ்வளவு பெரிதான இரட்சிப்பை அருளிச்செய்து உமது பிள்ளையாக மாற்றினீரே. விலையேறப்பெற்ற அந்த அன்பிற்காக உம்மைத் துதிக்கிறேன், நன்றி செலுத்துகிறேன்.

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறவரே! என் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உம் கரத்தில் தருகிறேன். அவர்கள் அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் உமக்கு விரோதமாய்ச் செய்த எல்லா பாவங்களையும் கிருபையாய் மன்னித்தருளும். உமது கல்வாரி அன்பை வெளிப்படுத்தி அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி குணப்பட உமது கிருபையால் அவர்களைச் சந்தித்தருளும்.



எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிடுகிறவரே! 'நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் (யோவா 12:32) என்கிற உம் வசனத்தின்படி உமது அன்பின் கயிறுகளால் அவர்களை உம் சமுகத்தில் இழுத்துக்கொள்ளும். உம்மை அறிகிற அறிவை அவர்களுக்குத் தந்தருளும்.

வழியும் சத்தியமும் ஜீவனுமானவரே! உம்மாலேயன்றி ஒருவனும் பிதாவனிடத்தில் வரான் எனும் சத்திய வசனத்தை அவர்கள் அறிந்துணர்ந்து உம்மை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளும்படி அவர்களது மனக்கண்களைத் திறந்தருளும். அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவித பலத்த செய்கைகளினாலும் அவர்களைச் சந்தித்து உமது பெரிதான இரட்சிப்பை இன்று விளங்கப்பண்ணும். நானும், என் வீட்டாருமாக உம்மையே சேவிக்க அநுக்கிரகம் செய்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் இரட்சிப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்கதாக தேவகிருபையானது பிரசன்னமாகி... இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது' (தீத் 2:11-13)

# கணவர் இரட்சிக்கப்பட!

'நான் உம்முடைய கிருபையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்; உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்' (சங் 13:5)

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! வல்லமையும், பராக்கிரமமுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்

உமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தில் உம் பிரசன்னம் வருகிறேன். பாவத்தில் மரித்துக் கிடந்த என்னைத் தேடி வந்து உமது விலையேறப்பெற்ற இரட்சிப்பை எனக்கு அருளிச் செய்தீரே. பெரிதான அந்த கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

இப்பொழுதும் என் கணவருடைய இரட்சிப்பிற்காக உம்மை நோக்கிப் பார்க்கிறேன். இதுவரை அவர் அறிந்தும் அறியாமலும் உமக்கு விரோதமாய்ச் செய்து வந்த எல்லாப் பாவங்களையும் தயவாய் மன்னியும். அவருடைய இரட்சிப்பிற்குத் தடையாக என்னிடத்தில் ஏதாவது குறைகள் இருக்குமேயானால் என்னையும் மன்னித்தருளும். அதனைக் களைந்தெரிய எனக்குக் கிருபை தாரும். உமக்குக் கீழ்ப்படிவதுபோல நான் அவருக்கும் கீழ்ப்படிந்து அன்பினால், பரிசுத்த நடக்கையினால் அவரை உமக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ள எனக்கு ஞானத்தையும், பெலத்தையும் தந்தருளும்.



ஜீவனை இரட்சிக்க வந்தவரே! 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்' (அப் 16:31) என்கிற வாக்குமாறாத உமது சத்தியத்தின்படியே என் கணவர் இன்றைய தினமே இரட்சிக்கப்படவும், குடும்பமாய் நாங்கள் உம்மைத் தொழுதுகொள்ளவும் நீர் எங்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும்.

தம்மை வெளிப்படுத்த சித்தங்கொண்டிருக்கிறவரே! ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பின உம்முடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவையும் அறிகிற அறிவை என் கணவருக்கு தந்தருளும். உம் பரிசுத்த புயத்தை வெளிப்படுத்தி அந்தகாரத்திலும், மரண இருளிலுமிருந்து அவரை வெளிப்படப்பண்ணி, கட்டுகளை அறுத்தருளும். உம்முடைய வல்லமையை வெளிப்படுத்தும்படி, அவருடைய மனக்கண்களைத் திறந்து உமது நாமத்தினிமித்தம் அவரை இரட்சித்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு அவருக்கு விலையேறப்பெற்ற இரட்சிப்பை அருளினதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!!

'இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்' (கொலோ 1:13)

# ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் பெருக!

'நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்' (கொலோ 3:1)

பரமண்டலங்களில் வாசமாயிருக்கிற பிதாவே! கிருபை நிறைந்த உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!!

உமது நேசகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம் கரங்களில் என்னை அர்ப்பணிக் கிறேன். இந்தநாள் வரை நீர் எனக்கு செய்துவந்த அத்தனை நன்மைகளுக்காகவும், தந்தருளிய எல்லா இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இப்பொழுதும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் நீர் என்னை நிறைக்கும்படி, பரத்திலிருந்து அந்த ஆசீர்வாதங் கள் என்மேல் அளவில்லாமல் பொழிந்தருளப் படும்படி உம்மை நோக்கிப் பார்க்கிறேன்.

சகலவித நன்மைகளையும் சம்பூரணமாய் கொடுக்க வல்லவரே! இதுவரை இல்லாத அளவு என்மேல் உமது அபிஷேகத்தையும், வல்லமை யையும் இன்று ஊற்றியருளும். உமது கிருபையின் ஆவியினாலும், விண்ணப்பத்தின் ஆவியினாலும், துதியின் ஆடையினாலும், வல்லமை வரங்களி னாலும் என்னை அதிகமாய் நிறைத்தருளும்.



கிறிஸ்துவுக்குள் சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறவரே! உம்மை நேசிக்கிற நேச வைராக்கியத்தினால் என்னை நிறைத்தருளும். உம்மீதுகொண்டுள்ள வாஞ்சையும், தாகமும், ஏக்கமும், ஆசையும், பாசமும் என்னில் பன்மடங்கு பெருகும்படி உமது நாமத்தைக் குறித்த பக்தி வைராக்கியத்தினால் என்னை வெகுவாய் நிரப்பி யருளும். ஒவ்வொருநாளும் உம் சமுகத்தில் காத்திருந்து ஜெபிக்க, உமது சத்திய வசனத்தை ஆசையாய் வாசித்து தியானிக்க, உமது பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்க, உமது மெல்லிய சப்தத்தைக் கேட்க, உம் சித்தம் அறிந்து என் வாழ்வில் உம் நாமம் விளங்கும்படி அதனை நிறைவேற்ற எனக்கு கிருபை செய்தருளும்.

என்னில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிற ஆவியானவரே! தேவனிடத்தில் நான் கேட்டு பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து அனுதினம் உம்மோடு நடந்திட உதவியருளும்.

பிதாவே! என் ஜெபத்தைக் கேட்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எனக்கு அருளுவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'நம்முடைய... பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர் வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்' (எபே 1:3)

# தேவனை அறிகிற அறிவில் வளர!

‘தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது’ (IIபேது 1:2)

பரலோகத்தில் வாசமாயிருக்கிற எங்கள் பிதாவே! கிருபை பொருந்திய உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது நேசகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம் சமுகத்திற்கு வருகிறேன். ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து உம்மை எனக்கு வெளிப்படுத்தின விலையேறப்பெற்ற அந்த அன்பிற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். உமது குமாரன் மூலமாய் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை அருளிச்செய்த அந்த பெரிதான கிருபைக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன்.

இப்பொழுதும் நான் உம்மை அறிகிற அறிவில் வளர நீர் எனக்கு அநுக்கிரகம்செய்தருளும்படி உம் கிருபாசனத்தண்டையில் வருகிறேன். ‘மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது’ (ஏசா 1:3) என்று சிறைப்பட்டுப்போகும் உமது ஜனத்திற்காக வேதனையடைந்தீரே, உம்மைப் பற்றும் அறிவிலும், உமது குமாரனைப் பற்றும் அறிவிலும் வளர்ந்திட எனக்கு கிருபை தந்தருளும்.



ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானவரே! நான் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் உம்மை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, உம்மை அறிகிற அறிவில் விருத்தியடையவும், உமக்கே பிரியமுண்டாக உமக்குப் பாத்திரனாய் நடந்துகொள்ளவும் எனக்கு உதவி செய்தருளும். உம்மைப் பற்றும் அறிவில் ஒருமைப்பட்டவனாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராகும்படி தயை செய்தருளும்.

சகல சத்தியத்திலும் நடத்தும் ஆவியானவரே! உம்மை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் குப்பையும், தூசியுமாக எண்ணவும், உம்மை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்பும் எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தவும் பெலன் கொடுத்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உம்மை அறிகிற அறிவையும், கிருபையையும் தந்தருளுவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!!

‘நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்’ (IIபேது 3:18)

# பிரகாசமான மனக்கண்கள் உண்டாக!

'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்' (எபே 1:17-19)

பரலோகத்தில் வீற்றிருக்கிற எங்கள் பிதாவே! சர்வ வல்லமையுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உம்மண்டை வருகிறேன். வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவனே! உம்முடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் முகத்திலுள்ள மகிமையின் அறிவாகிய ஒளியை என் இருதயத்தில் பிரகாசிக்க வைத்து என் மனதைத் திறந்தீரே, அதற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவரே! இப்பொழுதும் நான் எல்லா ஆவிக்குரிய ஞானத்தோடும், விவேகத்தோடும் உம் சித்தத்தையும், உம் நாமத்தின் வல்லமையையும், உம் வல்லமையின் பராக்கிரமத்தையும், உம் தயவையும், இரக்கத்தையும், மனதுருக்கத்தையும், கிருபையையும் அறிகிற அறிவில் விருத்தியடைந்து உமக்கே பாத்திரனாய் நடந்துகொள்ள நீர் எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்தருளும்படி வேண்டுகிறேன்.



பிதாவும், கர்த்தரும், தேவனுமானவரே! உம்மை அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை நீர் எனக்கு தந்தருளி, நீர் என்னை அழைத்திருக்கிறதினாலே எனக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் உமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், நீர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த உமது பலத்த சத்துவத்தின் வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் அறியும்படி, நீர் எனக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று உம்மை வேண்டுகிறேன்.

தேவனின் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானவரே! உமக்கு முன்பாக நிற்க பாத்திரவானாக நான் எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருந்து பிரகாசிப்பிக்கப்பட எனக்கு கிருபை செய்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்' (லூக் 24:31)

# உள்ளான மனிதனில் பெலனடைய!

'நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட... உங்களுக்கு அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்' (எபே 3:16,19)

பரமண்டலங்களிலிருக்கிற பிதாவே! சத்துவமும், வல்லமையுமுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் உள்ளான மனுஷன் நாளுக்குநாள் பெலனடைய உம்மை நோக்கிப் பார்க்கிறேன்.

தம்முடையவர்களைப் பலப்படுத்தி சகாயம் பண்ணுகிற தேவனே! தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர், உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு, எவரையும் மேன்மைப் படுத்தவும் பலப்படுத்தவும் உம் கரத்தினால் ஆகும். இப்பொழுதும், என் உள்ளான மனுஷனை நீர் பெலத்தால் இடைகட்டும்படி என் வழிகளை உமக்கு முன்பாக நேராக்குகிறேன். 'கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்' (எபே 6:10) என்றுரைக்கும் உமது வார்த்தையை அசட்டைப்பண்ணி என் ஆவிக்குரிய ஜீவியத்தில் அனலுமின்றி, குளிருமின்றி இருந்த என் எல்லாப் பாவங்களையும் கிருபையாய் மன்னித்தருளும்.



தமது ஜனத்திற்குப் பெலனையும், சத்துவத்தையும் அருளுகிறவரே! உமது வார்த்தையினால், அபிஷேகத்தைலத்தினால், ஆவியின் வல்லமையினால் நான் நிறையப்படும்படி என் தளர்ந்த கைகள் திடப்படவும், தள்ளாடுகிற முழங்கால்கள் பலப்படவும் உமது ஆவியின் வைராக்கியம் என்னைப் பற்றிப் பிடிக்க விட்டுக்கொடுக்கிறேன்.

தம்முடையவர்கள் திடப்படும்படி அவர்களை உருவேற்படுத்துகிற யேகோவா என்னும் நாமமுள்ளவரே! ஆவிக்குரிய சகல ஞானத்தோடும், புத்தியோடும் உம்மை அறிகிற அறிவிலே நான் வளர்ந்து உமக்கே பிரியமுண்டாக நடந்துகொள்ள மகிமையான உமது வல்லமையின்படியே என்னை பலப்படுத்த வேண்டுதல் செய்கிறேன். என்னில் உம்மைக் குறித்த வைராக்கிய வாஞ்சை பெருகவும், உம்மாலே என் உள்ளான மனுஷன் பெலத்தின்மேல் பெலனடையவும் கிருபை செய்ய வேண்டுகிறேன்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உள்ளான மனிதனில் நாளுக்கு நாள் பெலனடைய அநுக்கிரகிப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' (அப் 1:8)

# தரிசன வெளிப்படுத்தல்கள் கிடைக்க!

'அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி... தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்' (அப் 1:3)

பரலோகத்தில் வாசம்பண்ணுகிற எங்கள் பிதாவே! பராக்கிரமமுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம் பிரசன்னத்திற்கு வருகிறேன். ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தரிசனமான மகிமையின் தேவனே! நீர் எனக்கு தரிசனமாகி உம்மை வெளிப்படுத்த மன்றாடுகிறேன். உம்மிடத்திலிருந்து தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும், சொப்பனங்களையும் பெற்று என் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து பெருகவும், மகிமையின்மேல் மகிமை அடையவும் நீர் எனக்கு அநுக்கிரகிக்க உம்மை வேண்டுகிறேன்.

சர்வ வல்லமையுள்ள தேவன் எனும் நாமத்தினிமித்தம் தரிசனமானவரே! உமது நாமத்தின் வல்லமையையும், உமது வல்லமையின் மகா மேன்மையையும், உமது பலத்த சத்துவத்தின் மகத்துவத்தையும், உமது காருண்யத்தையும், இரக்கத்தையும், கிருபையையும், தயவையும் நான் இன்னும் அறிந்துகொள்ளும்படி உம்மை எனக்கு வெளிப்படுத்த உம்மை நோக்கிப் பார்க்கிறேன்.



சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவரே! 'தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் (Iகொரி 2:11) என்று வேதம் சொல்கிறபடி உமது பரிசுத்த வேதஎழுத்துக்கள் மூலம் உம்மைக் குறித்த சத்தியத்தை, மறைபொருளை, இரகசியத்தை எனக்கு வெளிப்படுத்தும்.

முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜூவாலையிலே மோசேக்கு தரிசனமான கர்த்தரே! என் வாழ்வில், என் குடும்பத்தில், என் சபையில், என் தேசத்தில் நீர் செய்யப்போகும் காரியத்தை உமது வார்த்தையினாலே வெளிப்படுத்தும். இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே உமது அடியானின் செவிக்கு தெரியப்படுத்தும். ஞானதிருஷ்டியடைந்து உமது தரிசனங்களை அடைய கிருபை தாரும். பிரத்தியட்ச தரிசனங்கள் மூலம் என்னை சந்தித்தருளும். தேவஞானத்தின் இரகசியங்களை எனக்குப் போதித்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் அருளுவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும், கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன்' (IIகொரி 12:1)

# தேவ வல்லமையால் நிரப்பப்பட!

‘பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து... பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்’ (அப் 1:8)

பரமண்டலங்களில் வாசமாயிருக்கிற பிதாவே! வல்லமை நிறைந்த உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம் சமுகம் வருகிறேன். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தமது வல்லமையை விளங்கப்பண்ணுகிற உம் கரத்திலே என்னை முழுமையாய் ஒப்புவிக்கிறேன்.

மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனே! ‘தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டு தரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே’ (சங் 62:11) என்று தாவீதைப்போல உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து, உம் வல்லமையையும், மகிமையையும் நான் காணும்படி எனக்கு அநுக்கிரகம் செய்தருளும். உமது வல்லமையின் பராக்கிரமத்தை அறிந்துணரும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை எனக்குத் தந்தருளும். எல்லா அதிகாரத்தோடும், வல்லமையோடும் உமக்கு ஊழியஞ்செய்யவும், ஜெயம் பெற்ற வாழ்க்கை வாழவும் உம் கரத்தின் வல்லமையால் என்னை அதிகமாய் நிறைத்தருளும்.



‘கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்’ (எபே 6:10) என்று வேதம் சொல்கிறபடி உமது ஆவியினாலே வல்லமையாய்ப் பலப்படவும், என் ஆவிக்குரிய வாழ்க்கையில் அனுதினமும் வளர்ந்து பெருகவும், பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடையவும், தேவ வல்லமையினாலும், பரிசுத்தாவியின் அபிஷேகத்தினாலும் அளவில்லாமல் நிறையப்படவும் நீர் எனக்குக் கிருபை செய்தருளும்.

உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷருக்கு வரங்களை அளித்தவரே! ஆவிக்குரிய அத்தனை வரங்களையும் எனக்குத் தந்தருளும். உமது திவ்விய வல்லமையினாலே என்னை நிறைத்தருளும். என்னிலிருந்து உமது வல்லமை புறப்பட்டு அநேகரைக் குணமாக்கவும், அசுத்தாவிகளும் அவர்களை விட்டோடிப்போகவும் உம் வல்லமையைப் பெரிதாய் விளங்கப்பண்ணும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது வல்லமையாலும், வரங்களாலும் என்னை நிரப்புவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

‘இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்’ (II கொரி 4:7)

# ஊழிய வாஞ்சை உண்டாக!

'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஜெமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் (லூக் 10:2)

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! ஜீவனும், வல்லமையுமுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தில் என்னை உம் கரத்தில் தருகிறேன். உம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் எல்லாருக்காகவும் அவரையே ஒப்புக்கொடுத்து அன்புகூர்ந்தீரே! அந்த அன்பை அளவில்லாமல் என்னில் ஊற்றும்படி உம்மை வேண்டுகிறேன்.

இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த தேவகுமாரனே! நீர் திரளான ஜனங்களைக் கண்டு, மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்த அவர்கள்மேல் மனதுருகினதைப்போல நானும் இக்காலத்திலே உம்மை சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருக்கிற அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காக மனதுருகி விண்ணப்பம்பண்ண எனக்குக் கிருபை தாரும்.



நன்மை செய்கிறவராய், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித்திரிந்தவரே! 'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' (மாற் 16:15) என்கிற உம் வார்த்தையின்படி அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்தவர்களாயிருக்கிற என்னுடைய ஜனத்திற்கு உமது இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவித்திட நீர் எனக்கு அநுக்கிரகம் செய்தருளும்.

மகாதீர்க்கதரிசியானவரே! தேசத்தில் நீர் எழுப்பியிருக்கிற ஊழியர்களோடும், தீர்க்கதரிசிகளோடும், வேதத்தைக் கைக்கொள்ளுகிற அனைவரோடும் கூட என்னையும் உமது ஊழியனாய் நிறுத்தும். ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடராய்ப் பிரகாசிக்க எனக்கு கிருபை செய்தருளும். உம்மையறியாத ஜனங்களுக்கு பாவமன்னிப்பாகிய மீட்பை சுவிசேஷமாய் அறிவித்து அநேகரை உம் ராஜ்யத்தில் சேர்க்க கிருபை தந்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு ஊழிய வாஞ்சையையும், தாகத்தையும், பெலத்தையும் தருவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்.ஆமென்!

'மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்' (மாற் 10:45)

# தேவனால் பயன்படுத்தப்பட!

'கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்' (மாற் 16:20)

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! வல்லமைமிக்க உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது செல்லப் பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம்மை நோக்கிப் பார்க்கிறேன். இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்கும்படி வல்லமை நிறைந்த பாத்திரமாய் நீர் என்னை உருவாக்க உம் கரத்திலே என்னை ஒப்புவிக்கிறேன்.

நல்மேய்ப்பரே! நீர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள்மேல் மனதுருகி, அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்று சொல்லி உம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தீரே, அதுபோல் பாவத்திலும், சாபத்திலும், வியாதியிலும், பிசாசின் பிடியிலும் சிக்கித்தவிக்கிற ஜனங்களை விடுவித்து உம்மண்டை சேர்க்க நீர் என்னை உமது அபிஷேகத் தைலத்தினால் நிரப்பும்படி ஜெபிக்கிறேன்.



உயிர்த்தெழுதலும், ஜீவனுமானவரே! 'நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்' (யோவா 14:12) என்றுரைத்தீரே, அதின்படி நீர் எனக்கு அதிகாரமும், வல்லமையும் தந்து குருடர் பார்வையடையவும், செவிடர் கேட்கவும், சப்பாணிகள் நடக்கவும், குஷ்டரோகிகள் சுத்தமாகவும், மரித்தோர் எழுந்திருக்கவுந்தக்கதாக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்து தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க நீர் உமது கரத்தை நீட்டும்படி ஜெபிக்கிறேன்.

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவியானவரே! அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமையோடும், பலவித பலத்த செய்கைகளோடும் கர்த்தருடைய நாமத்தை பூமியெங்கும் பிரசித்தம்பண்ண உதவியருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என்னை வல்லமையாய்ப் பயன்படுத்தப்போவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்' (எபே 4:8)

# தெய்வீக குணங்களில் வளர!

'தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்' (ரோம 12:2)

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! தயை பொருந்திய உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது பரிசுத்தப் பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம்மண்டை வருகிறேன். நீதியும், பரிசுத்தமுமுள்ளவரே! உமக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமும், குற்றமில்லாதவனுமாயிருப்பதற்கு உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் என்னைத் தெரிந்துகொண்டீரே, மேலான அந்த அன்பிற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரே! நான் இதுவரை அறிந்தும், அறியாமலும் உமக்கு விரோதமாய்ச் செய்த எல்லா பாவங்களையும் தயவாய் மன்னியும். என் ஆவி ஆத்தும சரீரத்தை உமக்கே பிரியமான ஜீவபலியாக இப்பொழுது உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கிறேன். நான் பாவஞ்செய்யாமல், நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவனாயிருக்க எனக்குக் கிருபை தந்தருளும். என்னை உள்ளும், புறம்புமாக நீரே ஆளுகை செய்து உமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக என்னை மறுரூபப்படுத்தி எனக்குள் உம்மை வெளிப்படுத்தும்.



தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின்வைத்துச் சென்றவரே! 'ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' (யோவா 15:5) என்றுரைத்தீரே, அனுதினமும் உம் சமுகம் காத்திருந்து, உம்மில் நிலைத்திருந்து, உம்மில் வேர்கொண்டு, கனியுள்ள ஜீவியத்தால் உம்மை இப்பூவுலகிற்கு வெளிப்படுத்த கிருபை செய்தருளும்.

பிதாவினிடத்திலிருந்து இறங்கி வந்த சத்திய ஆவியாகிய தேற்றரவாளனே! கிறிஸ்துவைப் பற்றி நீர் இன்னும் அதிகமாய் எனக்கு வெளிப்படுத்தி தம்முடைய மகிமையினால், காருண்யத்தினால் அழைத்த தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவைப் போல் மாறவும், நடந்துகொள்ளவும், பரிசுத்த தேவனுடைய நாமத்தை என் வாழ்க்கையாலே மகிமைப்படுத்தவும் எனக்கு உதவி செய்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது குமானுடைய சாயலுக்கொப்பாக என்னை மாற்றுவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாயிருக்கும்பொருட்டு, மகோமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' (IIபேது 1:4)

# உதாரத்துவமாய் கொடுக்கிறவனாக மாற!

'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும் படித் தசமபாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டுவாருங்கள்' (மல் 3:10)

பரமண்டலங்களில் வாசம்பண்ணுகிற பிதாவே! கிருபை நிறைந்த உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது செல்லப் பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம்மை நோக்கிப் பார்க்கிறேன். ஐசுவரிய சம்பன்னரே! நான் ஐசுவரியவானாகும்படி உம்முடைய குமாரனை தரித்திரத்திற்கு ஒப்புவித்து என்னில் அன்புகூர்ந்தீரே, அதற்காக ஸ்தோத்திரம்.

ஆசீர்வாதத்தைச் சம்பூரணமாய் பொழியப் பண்ணுகிறவரே! என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டீரே, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை எனக்கு அருளுகிறவர் நீர் அல்லவா? உம்முடைய பரிசுத்த நாமத்துக்காகவும், உமது ஆலயத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் தசமபாகம், பங்கு, காணிக்கை போன்ற பரிசுத்த காணிக்கைகளிலெல்லாம் மன உற்சாகமாய்த் தாராளமாய்க் கொடுத்து உம்முடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்பட என்னையும் பயன்படுத்த உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன்.



தேவனுக்கு தம்மையே சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்தவரே! 'இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்' (மாற் 12:41) என வேதம் சொல்கிறதே, சகலமும் அறிந்திருக்கிற உமக்கு பரிபூரணத்திலிருந்து அல்லாமல், என் ஜீவனுக்கு உண்டானவைகளிலிருந்தும் உதாரத்துவமாய்க் கொடுத்து என் ஆஸ்திகளாலே ஊழியஞ்செய்திட எழுப்புதலடைந்த ஞான இருதயத்தை எனக்குத் தந்தருளும்.

தயை பெருத்திருக்கிறவரே! 'கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்' (லூக் 6:38) என்ற வாக்கின்படி அப்போஸ்தலர் நாட்களைப் போல் அதிகமாய் உமக்குக் கொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற கிருபை செய்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உம் நாமத்துக்கு அதிகமாய்க் கொடுக்கிற கிருபையைத் தருவதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம்; இன்னும் மிச்சமும் இருக்கிறது; கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரளான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான்' (IIநாளா31:10)

# கள்ள உபதேசங்களுக்குத் தப்ப!

'ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால்... அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்' (IIயோவான் 1:10)

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! சத்திய மும், கிருபையுமுள்ள உம் நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

உமது செல்லப் பிள்ளையாகிய இயேசுகிறிஸ்து வின் நாமத்தில் உம்மை நோக்கிப் பார்க்கிறேன். சத்தியபரனாகிய கர்த்தாவே! உம்மை நான் அறிந்து கொள்வதற்காக சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க உம் குமாரனை அனுப்பி பாவத்திலும், சாபத்திலும் இருந்த என்னைத் தூக்கியெடுத்தீரே. உமது சத்திய ஆவியானவரை அனுப்பி சகல சத்தியத்திலும் என்னை வழிநடத்தி வருகிறீரே. மேலான அந்த அன்பிற்காக உம்மைத் துதிக்கிறேன்.

பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவருமான தேவகுமாரனே! உம்மைப் பற்றிய உண்மை யினின்று விலகும்படி என் மனதைக் கெடுக்கிற வேற்றுமையான உபதேசங்களுக்கும், விசுவாசத் தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல் தர்க்கங்களையும், கட்டுக்கதை களையும், முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் தாங்கி வருகிற கள்ள உபதேசங்களுக்கும் நீர் என்னை விலக்கிக் காக்க உம்மை மன்றாடுகிறேன்.



கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்த வரே! 'ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்' (மத்24:4) என்றுரைத்த உம் வார்த்தையின்படி இக்கடைசி காலத்திலே நீர் அனுப்பாதிருந்தும் உம் நாமத்தைக் கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனம் உரைக்கிற கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், அப்போஸ்தலர்களுக்கும், பக்க வழியாய் நழைந்திருக்கிற கள்ள சகோதரர் களுக்கும், கபடமுள்ள வேலையாட்களுக்கும் நீர் என்னை விலக்கிக் காத்தருளும்.

சகல சத்தியத்திலும் நடத்துகிற ஆவியானவரே! மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமான போதகங்களால் அடிபட்டு அலையாமல், அந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, இல்லையோ என நான் அறிந்துகொள்ளவும், வலது புறம், இடதுபுறம் சாயாமல் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று எனக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையைக் கேட்கவும் நீர் உதவி செய்தருளும்.

பிதாவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு பிசாசின் தந்திரமான கள்ள உபதேசங்களுக்கு விலக்கிக் காப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில்! ஆமென்!

'பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்' (Iதீமோ 4:1)

## வாங்கிவிட்டீர்களா?

வேதாகமத்தில் வைத்து ஜெபிக்கும்
விதத்தில் முழங்கால் யுத்தம் ஜெபக்கையேடுகள்

| | | |
|---|---|---|
| 1. | துதி பலிகள் | ரூ. 10/- |
| 2. | பிரார்த்தனை நேரம் | ரூ. 5/- |
| 3. | குடும்ப ஆசீர்வாதங்களுக்காக | ரூ. 5/- |
| 4. | விடுதலைக்காக | ரூ. 5/- |
| 5. | ஜெப சங்கீதம் | ரூ. 5/- |
| 6. | தேவனின் பாதத்தில் | ரூ. 5/- |
| 7. | இயேசுவின் அற்புதங்கள் | ரூ. 5/- |
| 8. | வெற்றி வாழ்விற்காக | ரூ. 5/- |
| 9. | கட்டுகளிலிருந்து விடுதலை | ரூ. 5/- |
| 10. | ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் | ரூ. 10/- |

ஜெபவீரர்கள்... இந்த ஜெபக்கையேடுகளை வாங்கி புதிய விசுவாசிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து எளிய முறையில் ஜெபித்து ஆசீர் பெற உற்சாகப்படுத்துங்கள்!

முழங்கால் யுத்தம், 46/AA, சாந்திநகர் மேற்கு, ஓசூர்
போன்: 04344 - 221616, 226363

Printers: Shenbagam Offset Printers, Sivakasi. Ph. 04562 220432

Spiritual Blessings

## Muzhangal Yuttham

# Spiritual BLESSINGS...

LORD has blessed us with every spiritual blessing in the heavenly places in Christ. (Ep 1:3)



E-mail: muzhangalyuttham@yahoo.com

MUZHANGAL YUTTHAM

Tntercessory Prayer Ministries

46/AA, Shanthi Nagar West Hosur - 635 109